# தமிழ்நாடு தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை

## படிவம் - 41

ஓ.மு.எண்: 4171/ஆ/2023.

நாள்: .06.2023.

மாவட்ட அலுவலர் அலுவலகம்,
தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை,
தென்காசி மாவட்டம்.

## - : தீ உரிமம் : -

**பொருள் ::** தீயணைப்பு-மீட்புப்பணித்துறை - தென்காசி மாவட்டம் - கட்டிடங்கள் சட்டமும் விதிகளும் - தீ அபாயமுள்ள இடங்களுக்கு தீ உரிமம் வழங்குதல் - தொடர்பாக.

**பார்வை ::** 1. 07.06.2023-ஆம் நாளிட்ட முதல்வர், M/s. JP College Of Engineering, ஆய்க்குடி, தென்காசி மாவட்டம் என்பவரது மனு.
2. 26.06.2023-ஆம் நாளிட்ட உதவி மாவட்ட அலுவலர், தென்காசி நிலையம் ஆய்வறிக்கை, ந.க.எண்: 287/2023.

*********

தென்காசி மாவட்டம், கடையநல்லூர் தாலுகா, அகரக்கட்டு, ஆய்க்குடி கிராமம் மற்றும் டவுண் பஞ்சாயத்து, அகரக்கட்டு – தென்காசி ரோடு, கதவு எண். 206/1, சர்வே எண். 283, 284/1, 289/3C1 என்ற முகவரியில் செயல்பட்டு வரும் M/s. JP College Of Engineering கல்லூரி 20.06.2023 அன்று தென்காசி நிலையம் உதவி மாவட்ட அலுவலரால் ஆய்வு செய்யப்பட்டது.

அவ்விடத்தில் வரைபடத்தில் உள்ளபடி தரைதளம், முதல்தளம் மற்றும் இரண்டாம் தளங்கள் (G+2) மட்டும் கொண்ட கட்டிடத்தில் நான்கு பிளாக்குகளில் **M/s. JP College Of Engineering** என்ற பெயரில் **“பொறியியல் கல்லூரி”** நடத்த கீழ்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு தீயணைப்பு-மீட்புப்பணித்துறையின் **“தீ உரிமம்”** வழங்கலாகிறது.

***நிபந்தனைகள்:***

1. மேல்நிலை / தரைமட்ட நீர்தேக்க தொட்டிகளில் எந்நேரமும் நீர் நிரப்பி அவசர காலங்களில் பயன்படுத்தும் வகையில் தயார்நிலையில் வைத்திருக்க வேண்டும்.
2. தீயணைப்பான்களை காலமுறையாக மறுநிரப்பம் செய்து எந்நேரமும் தயார் நிலையில் இருக்க வேண்டும். தீ வாளிகள் முறையாக பராமரிக்கப்பட வேண்டும்.
3. “In Compliance to section 3.2 of BIS 12459 : 1988 – Code of practice for fire safety in cable regularization, a transparent fire retardant coating of 1 meter shall be applied on all electrical cables at both sides of termination points in every electrical panel and all the cables in the distribution box”
4. வராண்டா / நடைபாதைகளில் தேவையற்ற பொருட்களை தடை ஏற்படும் வகையில் வைக்காமல் காலியாக விடப்பட வேண்டும்.
5. ஹோஸ் ரீல் சிஸ்டம் நிறுவப்பட வேண்டும்.
6. பக்கத்திறவிடங்கள் அவசரகால ஊர்தி மற்றும் நோயாளர் ஊர்தி அவசர காலங்களில் எளிதில் அணுகும் வகையில் காலியாக விடப்பட வேண்டும்.
7. காவலர் மற்றும் பணியாளர்களுக்கு தீயணைப்பு உபகரணங்களை கையாளுவதற்கு காலமுறையாக பயிற்சி அளிக்கப்பட வேண்டும்.
8. அவசரகால ஒத்திகை பயிற்சி (Mock Drill) ஆறு மாத காலத்திற்கு ஒருமுறை நடத்தப்பட வேண்டும்.
9. ஆய்வின்போது காணப்பட்ட கட்டடத்தில் எவ்வித மாற்றங்களும் செய்யக்கூடாது, அவ்வாறு மாற்றங்கள் ஏதும் செய்தால் இத்தீ உரிமம் தானாகவே இரத்தாகிவிடும் எனவும் தெரிவிக்கலாகிறது.
10. இத்தீ உரிமம் வழங்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டிற்கு மட்டுமே செல்லத்தக்கதாகும். மீண்டும் உரிய நாளில் புதுப்பிக்கப்பட வேண்டும்.

***அலுவலக முத்திரை:-***

மாவட்ட அலுவலர் அலுவலகம் த.நா.தீ.அ. & மீ.ப.துறை
30 JUN 2023
தென்காசி

3- 30/6/23

மாவட்ட அலுவலர்,
தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை,
திருநெல்வேலி மாவட்டம்,
தென்காசி மாவட்டம் (கூ.பொ).

Signature Not Verified
SAVARIMUTHU GNANASELVAM
AICTE APPROVAL 2024-2025
TENKASI
08:46 25.03.2024

30/6

30/6/23.

**பெறுநர்:** முதல்வர், M/s. JP College Of Engineering,
கதவு எண். 206/1, ஆய்க்குடி கிராமம் மற்றும் டவுண் பஞ்சாயத்து,
அகரக்கட்டு, கடையநல்லூர் தாலுகா, தென்காசி மாவட்டம் - 627 852.

படி : துணை இயக்குநர், தென் மண்டலம், தீயணைப்பு-மீட்புப்பணிகள்துறை, மதுரை.